விலை சதம் 75 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 மார்கழி 10 ஸபர் 26 இதழ் 313
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 25-12-81

## தலையீட்டை நிறுத்தாவிடில் பதிலடி கிடைக்கும்!

### சோவியத்யூனியனுக்கு றீகன் எச்சரிக்கை

வாஷிங்டன், டிச. 24 சோவியத் யூனியனின் தூண்டுதலாலேயே போலந்தில் இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. தொடர்ந்தும் போலந்தின் விவகாரங்களில் சோவியத் யூனியன் தலையிட்டுவருகிறது. இதனை உடனடியாக நிறுத்தாவிடின் அமெரிக்கா சோவியத் யூனியனுக்குத் தகுந்த பாடம் படிப்பிக்கும்.

இவ்வாறு அமெரிக்க அதிபர் திரு. ரொனால்ட் றீகன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

போலந்தின் இன்றைய நிலைக்குக் காரணம் சோவியத் யூனியனே. சோவியத்தின் வற்புறுத்தலின் பேரிலேயே போலந்தில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் திரு-

[10-ம் பக்கம் பார்க்க]

# மாநகரசபை உறுப்பினர் மீது கூட்டணி கடும் நடவடிக்கை

## நால்வர்மீது விளக்கம் கோரப்படும்

[நமது சிறப்பு நிருபர்]

**யாழ்- மாநகர சபையின் வரவு-செலவுத் திட்ட விவாதம், வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத தமிழர் விடுதலை கூட்டணி அங்கத்தவர்கள் சிலர் மீது கூட்டணி தலைமைப்பீடம் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறது.**

யாழ் மாநகர சபையின் அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டம் (பட்ஜட்) கடந்த புதன்கிழமை நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்பின் பின்னர் நிறைவேற்றப்பட்டது.

பட்ஜட்டை, கூட்டணியைச் சேர்ந்த 10 உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்தனர். எதிர்த்து நாலு அகில இலங்கை தமிழ்காங்கிரஸ்கட்சி உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

பட்ஜட் விவாதத்திலும், வாக்கெடுப்பிலும் கலந்து கொள்ளாத கூட்டணி உறுப்பினர்கள்மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள கூட்டணி தலைமைப் பீடம் இப்பொழுது முடிவு செய்துள்ளது. குறிப்பாக நாலு உறுப்பினர்கள் மீது கூட்டணி தலைமைப்பீடம் கடும் நடவடிக்கை மேற்கொள்ளும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரி

[10 ம் பக்கம் பார்க்க]

துப்பாக்கிமுனையில் நேற்று

## சிகரெட் விற்பனையாளர் தாக்கப்பட்டு கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் பிரபல நிறுவனமொன்றின் சிகரெட் விற்பனையாளர் ஒருவரை ஐந்து பேர் கொண்ட கோஷ்டி துப்பாக்கி முனையில் தடுத்து தாக்கிக்கொள்ளையடித்துள்ளது!

புங்கன்குளம் புகையிரத நிலையத்துக்கருகாமையில் நேற்றும் பிற்பகல் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சிகரெட் விற்பனையாளர் எம். சந்திரையா சைக்கிளில் சிகரெட் விற்பனை முடித்து வரும்பொழுது, மேற்படி கோஷ்டியினர் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி அவரைத் தாக்கி அவரிடமிருந்த பணத்தில் ஒரு பகுதியை பறித்துச் சென்றுள்ளனராம்.

இவரிடம் ஆயிரக்கணக்கான ரூபாய் வேறிடத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது திருடர்களின் கண்களுக்குத் தெரியவில்லையாம். யாழ். பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர். (ஈ)

### நத்தார் வாழ்த்து

அன்பான வாசகர்களுக்கும், விளம்பரதாரர், விற்பனையாளர்கள் அனைவருக்கும் "ஈழநாடு" தனது நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

—நிர்வாகி "ஈழநாடு"

★பல்கலைக்கழக அனுமதி: நால்வர் கருத்து

## தமிழ் மாணவருக்கு சற்று ஆறுதல் அளிக்கிறது-வித்தி

### பின்தங்கிய மாவட்ட சலுகையை குறிப்பிட்டகாலம் நீடித்திருக்கலாம்

—கல்லூரி அதிபர்

'5 வருட நிபந்தனை' அர்த்தமற்றது — பெண்கள் கல்லூரி அதிபர்

(யாழ்ப்பாணம்)

"பல்கலைக்கழக மாணவர் தெரிவு தொடர்பான புதியமுறை, தமிழ் மாணவர்களுக்கு சற்று ஆறுதலளிக்கக்கூடியதாக இருக்கும். திறமைக்கு இன்னும் கூடுதல் வீதத்தை அளித்திருக்கலாம்"

யாழ்ப்பாண பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், பல்கலைக்கழக மாணவர் தெரிவு புதியமுறைபற்றி கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"முன்னர் திறமைக்கு 30 வீதம் ஒதுக்கப்பட்டிருந்தது. இனிமேல் 40 வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை இன்னும் கொஞ்சம் கூட்டியிருக்கலாம்.

"பின்தங்கிய பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட சலுகையை இன்னும் கொஞ்சக் காலத்திற்கு அப்பகுதிகள் கல்வியில் முன்னேறும்வரை நீடித்து வைத்திருக்கலாம். ஆனாலும் பின்தங்கிய பகுதிகளுக்கு மாவட்ட ரீதியில் கிடைக்கும் 60 வீதம் கிடைக்கக்கூடியதாகவுள்ளது. முன்னர் மாவட்டத்திற்கு 55 வீதம் ஒதுக்கப்பட்டிருந்தது இது இனிமேல் 60 வீதமாக ஒதுக்கப்பட்டிருப்பதால் பின்தங்கிய பகுதியினர் ஓரளவு சலுகை பெறக்கூடியதாக இருக்கும். என்றாலும் பின்தங்கிய பகுதிக்குக் குறிப்பிட்ட அளவு விகிதாசாரம் கொடுத்திருக்கலாம். புதியமுறை நல்லது. வரவேற்கத்தக்கது" என்று பேராசிரியர் வித்தியானந்தன் தெரிவித்தார்.

**கல்லூரி அதிபர் கருத்து**

பல்கலைக்கழக புதிய அனுமதி முறைபற்றி யாழ் நகரின் முன்னணிக் கல்லூரியின் அதிபர் கருத்து வெளியிடுகையில், பின்தங்கிய பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த பதினைந்து சதவீதச் சலுகையை ஒரேயடியாக ரத்துச்செய்தது வரவேற்கக்கூடியதொன்றல்ல என்றார்.

திறமைக்கு பத்துவீதம் அதிகரிக்கப்பட்டிருப்பது வரவேற்கக்கூடியது என்று தெரிவித்த அவர், இதனை எழுபது வீதமாக உயர்த்தியிருக்கலாம் என்று கூறினார்.

'பின்தங்கிய பகுதிகளுக்கு முன்னர் பதினைந்து வீதம் ஒதுக்கப்பட்டிருந்தது. இச்சலுகையை [ஒரே

(10-ம் பக்கம் பார்க்க)

யாழ்--கொழும்பு நேரடித்தொலைபேசி:

## ரூ. 20லட்சம் செலவில் தொலைதொடர்பு சாதனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையிலான நேரடித் தொலைபேசித்தொடர்புச் சாதனங்களுக்கான நவீன யந்திரங்கள் சுமார் இருபது லட்சம் ரூபா செலவில் ஜப்பானிலிருந்து, யாழ் பெரிய தபால் அலுவலக தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்துக்கு வந்துள்ளன.

இந்த நவீன தொலைத் தொடர்புக் கருவியை இயக்கவும், திருத்தங்களைச் செய்வதற்கான பயிற்சியைப் பெறுவதற்கும் யாழ். பெரிய தபால் அலுவலகத்திலிருந்து ஏற்கனவே ஜப்பானுக்கு சென்றிருந்த இருவர் 4 மாத பயிற்சியை முடித்துக்கொண்டு தைமாதம் நாடு திரும்புவார்கள்.

இந்த நேரடி தொலைபேசி பரிவர்த்தனை வேலைகள் தைப் பொங்கலை அடுத்து துரிதப் படுத்தப்பட்டு 1982 ஏப்ரல் மாதத்தில் இயங்கும். இப்பொழுது சுமார் 1500 தொலை

(10-ம் பக்கம் பார்க்க)

## போலந்துக்கு எதிராக பொருளாதாரத் தடை

### அமெரிக்கா விதித்தது

வார்சோ, டிச 24 போலந்தின் இராணுவ அரசாங்கத்திற்கு எதிராக பொருளாதாரத்தடைகளை அமெரிக்க ஜனாதிபதி திரு. ரொனால்ட் றீகன் விதித்துள்ளார்.

போலந்தின் மக்கள் இராணுவத்தினரால் ஈவிரக்கமற்ற முறையில் துன்புறுத்தப்படுகின்றார்கள் என்றும், இது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்றும் திரு றீகன் தொலைக்காட்சியொன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்

அமெரிக்க கடல் எல்லையில் இதுவரை காலமும் மீன்பிடிப்பதற்கு போலந்திற்கு இருந்து வந்த உரிமையையும் றீகன் ரத்துச்செய்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை போலந்தின் சுரங்கத் தொழிற்சாலையொன்

(10 ம்பக்கம் பார்க்க)

## விசேட அறிவித்தல்

நத்தார் - புதுவருட வைபவங்களை
முன்னிட்டு எமது அலுவலகம்
24-12-1981 முதல் 1-1-1982 வரை
திறக்கப்படமாட்டாது என்பதை
வாடிக்கையாளர்கள், முதலீட்டாளர்களுக்கு
அறியத்தருகின்றோம்

**த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்**

249 - மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்

போன்: 7680



## உங்கள் பண முதலீட்டுக்கு

உறுதிமிகு பாதுகாவலும்
கவர்ச்சிமிகு தேட்டமும் தரும்
முதிர்ச்சிபெற்ற நம்பகமான
பணவிருத்தி ஸ்தாபனம்

**30%**

# தி சென்றல் ஃபினன்ஸ்
## கம்பெனி லிமிடெட்

| காலவரை | தொகை | வருடாந்த வட்டி | | |
|---|---|---|---|---|
| | | மாதாந்தக் கொடுப்பனவு | வருடாந்தக் கொடுப்பனவு | முடிவுகாலக் கொடுப்பனவு |
| 2வருடங்கள் | ரூபா 500 முதல் 100,000 வரை | 22% | 25% | 27% |
| 2வருடங்கள் | 100,000 உம் அதற்கு மேலும் | 24% | 27% | 30% |

## குறுகிய காலப் பண முதலீடுகளுக்கும் வசதிகள் அளிக்கின்றனர்

| காலவரை | தொகை | மாதாந்தக் கொடுப்பனவு | முடிவுகாலக் கொடுப்பனவு |
|---|---|---|---|
| 1 வருடம் | 500/- முதல் | 20 % | 22% |
| 6 மாதம் | ,, | — | 17% |
| 3 ,, | ,, | — | 15% |

இயக்குனர்: சி. விஜயனுயக்கா (சபாநாயகர்-நிர்வாக இயக்குனர்)
ஏ. எஸ். கருணாரத்ன, ஜே. பி., சட்டத்தரணி.
ரி. ஏ. துனுவில, ஓ பீ. ஈ., சட்டத்தரணி,
எம். சி. சன்சோனி, பீ ஏ. (இளைப்பாறிய பிரதம நீதியரசர்)
ரீ. எம். துனுவில, பீ ஏ., கர்னல் ஈ. ஜே. டிவிதோட்டவெல,
கர்னல் ஏ. ரீ. நுகவெல

முக்கிய வர்த்தகத்துறைகள்: பணக்கையாள்கை, காணி அபிவிருத்தி,
இறக்குமதி, பிரதிநிதித்துவம், விநியோகம்.

பொருளாதார நிலை பற்றிய தகவல்:-

| | 1977/78 ரூபா | 1978/79 ரூபா | 1979/80 ரூபா |
|---|---|---|---|
| முதலீடு | 1,522,500 | 1,522 500 | 1,522,500 |
| ஒதுக்கிய முதல் | 3,107,970 | 7,030 325 | 8,742,785 |
| முதலும் ஒதுக்கிய முதலும் | 4,630,470 | 8 522,725 | 10,265,285 |
| வைப்பு முதல் | 27,684,075 | 29,952,100 | 33,671.700 |
| கடன் பெறு முதல் | 207,205 | 2,333,606 | 5,075 248 |
| மொத்த நிதியம் | 36,198,309 | 46,252 788 | 55,529,513 |
| லாபம் (வைப்பாளருக்கு வட்டி கட்டமுன்) | 6,642,954 | 8,075,252 | 9,411,865 |
| வைப்பாளருக்கு கட்டிய வட்டி | 3,746,107 | 4,814 736 | 5,882 417 |
| அசல் லாபம் (வரி கட்டுமுன) | 2,896 847 | 3,260,516 | 3,529 448 |
| அசல் லாபம் (வரிகட்டிய பின்) | 1 786 805 | 1,775,842 | 2 135,945 |
| பங்கு லாபம் | 319,725 | 365,400 | 411,075 |
| பங்கு லாபம் | 21% | 24% | 27% |

### தி சென்றல் ஃபினன்ஸ் கம்பெனி லிமிட்டெட்
(இது வரையறை செய்யப்பட்ட பொது ஸ்தாபனம்
5-ந் திகதி ஜூலை 1957ல் பதிவு செய்யப்பட்டது)

தலைமை அலுவலகம்: 24, தலதா வீதி, கண்டி. போன்: 4098, 3818, 3076
நகர் அலுவலகம்: (நிர்வாகம் ஃபோர்ப்ஸ் அன் வாக்கர் லிமிட்டெட்) நம்பர் 221/5, தர்மபாலமாவத்த கொழும்பு-7, போன்: 93792
கிளை அலுவலகம்: 250, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 8360

ஏறத்தாழ இருபத்தைந்து வருடங்களாகப் பணவிருத்திப் பணி-பிறருக்காக


## இளைஞர்கள் விடுதலை
## காரும் ஒப்படைக்கப்பட்டது

(புலோலி)

வியாபாரி மூலை உபதபால் நிலையக் கொள்ளை முயற்சி சம்பவம் தொடர்பாக வாசரொருவர் நடன் ஒரு இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்த பொலிசார் விசாரணையின் பின் விடுதலை செய்தனர்.

பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியிலுள்ள வியாபாரி மூலை உப - தபால் நிலையத்தினுள் ஒரு குடைக்குள் வாளை மறைத்து கொண்டு உட் புகுந்த இளைஞரொருவர் உப - தபால திபரைப் பணத்தைக் கொள்ளையடிக்கும் நோக்கமாகப் பயமுறுத்த துணிச்சலுடன் உப - தபாலதிபர் குடையையும் வாளையும் அவ்விடமிருந்து பறித்ததும் இளைஞர் ஓடி மறைந்ததும் வாசகர் அறிந்ததே

கொள்ளை முயற்சிச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித் துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் திரு எஸ். திருச்சிற்றம்பலம், சார்ஜன்ட் ஜனுப். எம். ரீ எம். உவைஸ் ஆகியோரடங்கிய பொலிஸ் கோஷ்டி சந்தேகத்தின் பேரில் இரு இளைஞரைக் கைது செய்ததுடன் காரொன்றையும் கைப்பற்றி விசாரணை செய்தது.

விசாரணையின் பின்னர் இளைஞர்களை விடுதலை செய்த பொலிஸார் காரையும் ஒப்படைத்தனர்.

## 'மினி' பஸ்நிலையத்தை
## பண்ணைப் பகுதிக்கு
## மாற்ற நடவடிக்கை

(யாழ்ப்பாணம்

பண்ணையில் அமைக்கப்படவுள்ள வ பி. போ சபை பஸ் நிலையத்தில் "மினி" பஸ்கள் தற்காலிகமாக ஒழுங்கு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த பொலிசாரின் ஆலோசனை பெற்ற பின்னரே பண்ணையில் 'மினி' பஸ்கள் தங்குவதற்கான இறுதி முடிவு எடுக்கப்படும்.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கருகிலுள்ள இடங்களில் சேவையில் ஈடுபடும் மினி பஸ்கள் தங்கியிருப்பதால் மக்களின் போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சல் ஏற்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட பண்டிகை வேளைகளில் பொது மக்களின் நடமாட்டத்திற்கு மினி பஸ்களால் பெரும் பாதிப்பு ஏற்படுவதை தவிர்க்குமுகமாகவே பண்ணையில் நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. (நா)

## கார் விபத்து

(கொண்டாவில்)

பழுதடைந்தகாரை இழுத்து வந்த ஒரு கார் விநியைவிட்டு விலகி விபத்துக்குள்ளானதில் அருகில் உள்ள மின் கம்பம் முறிந்து வீழ்ந்ததுடன் கடையும் சேதமடைந்தது

இவ்விபத்து நேற்று முன் தினம் கொண்டாவில் உப்புமடம் சந்திக்கும் தாவடிச் சந்திக்குமிடையில் நிகழ்ந்தது.

முன்பாக வந்த கார் மின் கம்பத்தை இடித்த வீழ்த்தியதுடன் மின் கம்பம் வீழ்ந்து அருகில் இருந்த கடையும் சேதத்திற்கு உள்ளாகியது. காரின் முன்புறம் சேதத்திற்குள்ளானது.


# மில்க்வைற்

## ஆதரவாளர்களுக்கு

நத்தார்...புத்தாண்டு வாழ்த்துக்கள்!

★ சென்றகாலத்தில் மில்க்வைற் தயாரிப்புகளுக்கு நீங்கள் தந்த ஆதரவை வருங்காலத்திலும் தருமாறு தங்களை வேண்டுகின்றோம்.

★ மில்க்வைற் மேலுறைகளைச் சேகரித்துப் பெறுமதி வாய்ந்த பரிசுப் பொருட்களைப் பெற்று மகிழுங்கள்.

தங்கள் ஆதரவு வளர்க!

**மில்க்வைற் தொழிலகம்**

காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்.
த. பெ. இல. 77 தொலைபேசி இல: 7233



அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சிகரமான
நத்தார் வாழ்த்துக்கள்!

இறக்குமதி செய்யப்பட்ட

★ பாத்திர வகைகள் ★ நூதன விளையாட்டுச் சாமான்கள் ★ சோப்பை ★ பீங்கான்-கிளாஸ் ★ எனாமல், ★ அலுமினியம், ★ எவர்சில்வர் சாமான்களும் ★ நெல்குற்றும் ★ மாவு அரைக்கும் இயந்திரங்கள் அதன் உபஉறுப்புகள் ★ சுவர் மணிக்கூடுகள் ★ கைக்கடிகாரங்கள் ★ மின்சார மோட்டோர்கள் ★ மின்சாரவிசிறிகள் ★ மின்சார உபகரணங்கள் ★ மற்றும் வீட்டுப்பாவனைச் சாமான்களுக்கும் ★ சுவைமிக்க பேபிமார்க் குளிர்பானங்களுக்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்

# ராஜு ஸ்ரோர்ஸ்

67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 372. தந்தி: ராஜு

குச்சவெளி

## கிராமிய வங்கியில் ரூ. 5 லட்சம் கொள்ளை!

(திருகோணமலை)

ஆயுதந்தரித்த கொள்ளையர்கள் குச்சவெளி கிராமிய வங்கியில் ஐந்துலட்சரூபாய் பெறுமதியான நகைகளையும், 12,000 ரூபா ரொக்கத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12-30 மணியளவிலேயே இக் கொள்ளை நிகழ்ந்துள்ளது.

இது பற்றிய தெரிவித்த பொலிசார் மொரிஸ் மைனர் காரொன்றில் வந்த கொள்ளையர் வங்கி உத்தியோகத்தர்களை ஆயுதம் கொண்டு பயமுறுத்தி கொள்ளையடித்தனர் என்று கூறினர்.

உதவி பொலிஸ் அதிபர் திரு [illegible] சில்வா தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் கொள்ளையரையும், அவர்கள் வந்த காரினையும் கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். [தி]

சாவகச்சேரி நகரசபை 'பட்ஜட்'

## 'சந்தை விஸ்தரிக்கப்படும் நவீன நகரமண்டபம் நிறுவப்படும்'

### நகரசபைத் தலைவர் தகவல்

[சாவகச்சேரி]

"இந்நகராட்சிமன்ற நகரத்தின் சகல துறைகளிலும் திட்டமிட்டு அபிவிருத்தி செய்வதிலும் வரியிறுப்பாளர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதிலும் கவனம் செலுத்தியுள்ளது. 1982ம் ஆண்டு வருமானமாக 30 லட்ச ரூபா கிடைக்குமென்று பல்வேறு செலவினங்களுக்கு ரூபா 29½ லட்சரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது".

1982ம் ஆண்டுக்கான சாவகச்சேரி நகராட்சிமன்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தில் உரையாற்றிய நகராட்சிமன்றத் தலைவர் திரு. சி. க. [illegible] மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: "பொதுமக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையில், நவீன நகர மண்டபம் அமைத்தல், விளையாட்டரங்கு அமைத்தல், வடிகால்களை அமைத்தல், நீர்விநியோகம் போன்ற திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நீண்டகாலமாக [illegible] சேவையில் ஈடுபட்ட மாட்டுவண்டிமுறை [illegible] சேவையை ஈடுபடுத்துவதன் மூலம் நகராட்சி மன்றமும் சுற்றியுள்ள பிரதேசமும் சுகாதாரத்திற்கேற்ற பிரதேசமாகத் திகழும்.

"பொதுச்சந்தை வளவுக்குள்ளும் நவீன பஸ் நிலையத்துக்கும் குடிநீர் விநியோகம் செய்வதற்கு [illegible] எமது பாராளுமன்றப் பிரதிநிதி மூலம் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கீடுகள் செய்வதற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

"பொதுச்சந்தைப்பிரதேசத்தை பொறுத்தமட்டில் மக்களின் தேவைகளுக்கு ஏற்பப் போதாமலிருப்பதால் சந்தைப் பிரதேசத்தை விஸ்தரிப்பதற்கு சந்தைக்கருகாமையிலுள்ள வெற்றுக் காணிகளைக் கட்டாயச்சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் சுவீகரித்து மேலும் பாவனையாளர்களுக்கு வசதியை வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

"நகரில் கல்வி கலாசார விளையாட்டுத்துறையில் ஈடுபாடுடையோரை ஊக்குவிக்கும் பொருட்டு மேற்படி அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு மானியம் வழங்கவும் சிறந்த சாதனை மாணவர் இருவருக்குப் புலமைப்பரிசில் வழங்கவும் நிதி ஒதுக்கியுள்ளோம்.

"கச்சாய்வீதிப் புகையிரதக் கடவையிலும், தனங்கிளப்பு வீதிப்புகையிரதக் கடவையிலும் கடந்த காலங்களில் பல புகையிரத விபத்துக்கள் நிகழ்ந்துள்ளமையால் புகையிரதவீதிக் கடவைகள் அமைக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மேலும் 1982ம் ஆண்டு நிதிஆண்டு வேலைப்பகுதி வேலைகளைச்சபை நேரடியாகச் செய்வதற்கேற்ற வழிவகையும் வகுக்கப்பட்டுள்ளது". (ஈ)




## மீண்டும் பார்க்கத் தூண்டும் அழகு

ரெபெக்கா லீ ஷம்பூ நீங்கள் தனிச் சிறப்பான கவர்ச்சி பெறச் செய்கிறது. மீண்டும் திரும்பிப் பார்க்கத் தூண்டும் அழகுக் கவர்ச்சியை உங்களுக்கு அளிக்கிறது.




ரெபெக்கா லீ லைம் ஷம்பூ, எலுமிச்சைச் சாரம் கொண்டது. கூந்தலுக்கு உயிர்த் துடிப்பான மலர்ச்சியும் தூய்மையும் ஊட்டுகிறது.

ரெபெக்கா லீ எக் ஷம்பூ, இயற்கையான முட்டைப் புரதம் கொண்டது. உங்கள் கூந்தலுக்கு மேலும் செறிவும் செழுமையும் ஊட்டும்.

சில்லறை விலை: ரூ 14/50 நிகர அளவு 170 மிலிலிட்டர்

உங்கள் மனதுக்கு உவகைக் களிப்பூட்டும் ரெபெக்கா லீ

TAL—1592


### நதிகள்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒளி கோலெண்டாவில் சாந்தியைப் பரவியிருப்பதை நான் துல்லியமாகக் காண்கிறேன் என்றார்.

தெற்கு வட்டார முகாமையாளர் திரு வே. ஸ்ரீஸ்கந்தராசா உரையாற்றுகையில் "இவ்வுலகில் தவறு செய்யாதவர்கள் யாருமில்லை" இதனாற்றான் இயேசு கிறிஸ்து 'பாவம் செய்யாதவர்கள் யாராவதிருந்தால் பாவிமீது முதற்கல்லை வீசட்டும்' என்று பரிசேயர்களை நோக்கிக் கூறினார். தவறிழைப்பது மனித இயல்பு; மன்னிப்பது தெய்வீகச்செயல். இந்த மன்னிப்பை மானிடருக்குப் பெற்றுக் கொடுப்பதற்காகத் தமது உயிரை தியாகம் செய்தார் இயேசு கிறிஸ்து அத்துடன் நில்லாது "இவர்கள் அறியாமல் தவறு செய்கிறார்கள். இவர்களை மன்னியும் பிதாவே" எனத் தன்னைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காகவும் வக்காலத்து வாங்கினார். இத்தகைய ஒரு பெருமானுக்கு விழாவெடுப்பது எமது பெரும்பேறாகும் என்றார். (தி)

## வரி விளம்பரம்

### தேவை

எமது தொழிற்சாலைக்கு தச்சுவேலையில் அனுபவமுடைய ஆட்கள் உடனடியாகத் தேவை. திறமை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். வெள்ளி, சனியில் நேரில் வரவும். ஜெகசங்கர் தச்சுத் தொழிற்சாலை, 70, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1799

இலங்கையிலே முதன்முதலாக ஆரம்பித்து வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும் மின் கண்ணாடிச் சூளையில் (Electric Glass Furnace) அனுபவமுள்ள Bottle & Press Machine இயக்குனர் Bottle & Press Machine செப்பனிடும் கிமினி கிளாஸ் ஊதுவதற்கு சில பயுளர், செப்பனீ, புளோவர் போன்றவர்கள் உடனடியாகத் தேவை. சில வெற்றிடங்களே உண்டு. உடனே முந்துங்கள். வேலை பழகுபவர்களும் (Trainees) தேவை. நேரில் வரவும். சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ் நீர்வேலி 1795

### பயிற்சி

ஒரு மாத எலக்றிக்கல் பயிற்சி மோட்டார் மெக்கானிக் பயிற்சி 06-01-82 ஆரம்பமாகிறது. இன்ஸ்ரிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் செக்னொலொஜி 9/1 மாரன்னி வீதி யாழ்ப்பாணம். 1810

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# வெளிநாட்டில் பணிபுரியும் நம்நாட்டுத் திறமைசாலிகளுக்கு வரிச்சலுகை? அரசு ஆலோசனை

(கொழும்பு)

வெளிநாடுகளில் தொழில் பார்க்கும் நமது நாட்டுத் திறமைசாலிகளுக்கு வரி சலுகைகள் வழங்குவதன் மூலம் மீண்டும் அவர்களது சேவையைப் பெற அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது.

நாட்டில் தற்போது பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெற்று வருவதனால் திறமைசாலிகளது வெளியேற்றம் அபிவிருத்திக்குத் தடையாக இருப்பதாகவும் ஒரு சில வரிகள் விதிப்பதில் சலுகைகள் வழங்குவதன் மூலம் வெளிநாடுகளில் பணி புரியும் நம் நாட்டவரை இங்கு வரவழைக்க முடியுமெனவும் அரசாங்க உயர் பீடம் அறிவித்துள்ளது.

இலங்கையில் நடைபெற்று வரும் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றில் வெளிநாட்டு நிபுணர்கள் பணிபுரிவதாகவும் இவர்களுக்கு அரசாங்கம் சில வரிச்சலுகைகள் வழங்கியிருப்பதாகவும் இவ்வாறு வெளிநாட்டவருக்கு வழங்குவதுபோல நம்நாட்டு நிபுணர்களுக்கும் வழங்கும் பட்சத்தில் வெளிநாடுகளில் உள்ளோரை இங்கு வரவழைக்க முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டிலுள்ள வேலையாளர்கள் பலர் வரிச்சலுகைகளை அரசாங்கம் வழங்கும் பட்சத்தில் தாம் தாயகம் வர சம்மதிப்பதாக அறிவித்திருக்கின்றனராம். ஆகவே இது பற்றி இறுதி முடிவு அரசாங்கம் ஆலோசனை செய்து வருவதாகவும் அறியப்படுகின்றது. (இ)

## பெண்ணின் சங்கிலி மீட்பு

(யாழ்ப்பாணம்)

பட்டப்பகலில் பெண்ணிடம் சங்கிலி அறுத்துக்கொண்டோடிய இரு இளைஞர்களை பொலிஸார் கைதுசெய்து கொண்டனர்.

கல்வியன் காட்டைச்சேர்ந்த சுப்பிரமணியம் நிலகமணி சந்தைக்குச் சென்று வீடு திரும்பிச் சென்ற சமயம் இரு இளைஞர்கள் சங்கிலியை அறுத்ததாக சுன்னாகம் பொலிஸில் புகார் செய்யப்பட்டது.

பொலிஸ் சார்ஜன் சென்ரல் லைக்ஸ்டீபின் ஆர். எஸ். சந்திரசாமி, சே. மாணிக்கம், பி. ஜெணகம் ஆகியோர் நல்லூரை சேர்ந்த இரு இளைஞர்களை கைது செய்தனர். இளைஞர்களின் வீட்டுக்குள் இருந்து 4000 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியையும் மீட்டனர். (மா)

## கட்டடத்தை தாக்கினர்

(கொழும்பு)

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த கொழும்புத் துறைமுகத் தொழிலாளர் நேற்று முன்தினம் துறைமுகத்திலுள்ள தொழிற்சங்கக் கட்டடத்தைத் தாக்கி பெருஞ்சேதம் விளைவித்ததை அடுத்து இங்கு வந்த கலகம் அடக்கும் பொலிஸ் வேலை நிறுத்தக்காரரின் தாக்குதல்கள் மேலும் விரிவடையாது தடுத்தனர்.

சம்பளப்பிரச்னை சம்பந்தமாக துறைமுக அதிகார சபையின் அறிவித்தல் சற்றே வேலை நிறுத்தக்காரர் ஒன்று கூடிய போது நேற்று அதிகாரசபை வேலையாட்களை மீண்டும் வேலைக்குத் திரும்புமாறு அறிவித்தாம். இதனைத் தொடர்ந்து வேலை நிறுத்தக்காரர் காலஞ் செய்யத் தொடங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

## பெண்கடத்தல் வழக்கு: பிணை பறிமுதல் செய்து எதிரிக்குப் பிடிவிறாந்து

(புலோலி நிருபர் திருச்செல்வம்)

வல்வெட்டித்துறைப் பெண் கடத்தல் பிணையில் நின்ற 3ம் எதிரியின் பிணை பறிமுதல் செய்யப்பட்டு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டது. 6ம் எதிரிக்கும் விறாந்து பிறப்பிக்கப்பட்டது.

கடந்த செப்டெம்பர் மாதம் 24ம் திகதி வீட்டுக் குளிக்குமிருந்த இளம்பெண்ணை கடத்திச் சென்றதாகக் குற்றஞ்சாட்டி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பா. ரவிசங்கர், வே. பிரேம்ராஜ், த. குணரத்தினம், ஆ. உதயகுமார், வேலு செல்வகுரு, க. தேவச்சந்திரன், பா. ஜெயசங்கர், சு. விஜயகுமார், நா. லோகேந்திரன் ஆகியோருக்கெதிராக வல்வெட்டித்துறைப் பொலிசார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர்.

இப்பெண்கடத்தல் வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு வே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான எஸ். ஜெகலிங்கம், வி. செல்லத்தம்பி, செல்வி விஜயராணி மகாதேவா, எஸ். இலங்கைச் சுந்தரம் [யாண்டியன்] கே. பாலகிருஷ்ணன் ஆகியோரும் பொலிசாருக்கு உதவியாக சட்டத்தரணிகளான என். கிருஷ்ணராசா, ஆர். டி. இரத்தினலிங்கம் ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

எதிரிகளில் 6ம் எதிரி குணரத்தினமும், 6ம் எதிரி தேவச்சந்திரனும் ஆஜராகவில்லை. 3ம் எதிரி வெளிநாடு சென்று விட்டதாகவும், 6ம் எதிரியைக் கண்டுபிடிக்கமுடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. நீதிபதி 3ம் எதிரியின் பிணை 1000 ரூபாவைப் பறிமுதல் செய்து பிடிவிறாந்து பிறப்பித்ததுடன் 6ம் எதிரிக்கு விறாந்தும் பிறப்பித்தார். மேல் விசாரணை தை மாதம் 15ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## நீதிபதி பாராட்டு

[சாவகச்சேரி]

"இலங்கையில் இடங்களில் பாலர் பாடசாலை நிகழ்ச்சிகளைக் கண்டு ரசித்திருக்கிறேன். ஆனால் இன்றைய நிகழ்ச்சிகளைப் போல் நான் எந்தப் பாலர் பாடசாலையிலும் கண்டதேயில்லை"

சாவகச்சேரி திருச்சபை பாலர் பாடசாலைக் கதம்ப விழாவிற்குப் பிரதம விருந்தினராக கலந்து கொண்டாரம் நீதிபதி எஸ். யேசுதாசன் மேற்கண்டவாறு கூறினார்.

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிபதி சி. வி. விக்கினேஸ்வரன் உதவி அரசாங்க அதிபர் திரு வே. துரைராசா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஏ)

## 'பதினொரு வயதுச் சஜந்தேஸ்வரன் துவக்குச் சூட்டினால் சுவாசத்தடை ஏற்பட்டு மரணமானார்'

### கம்பர்மலை அறுவர் கொலைவழக்கில் டாக்டர் சாட்சியம்

[புலோலி]

கம்பர்மலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அறுவர் துப்பாக்கிச் சூட்டுக் கொலை வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு வே. எஸ். மகேசன் முன்னிலையில் நடைபெற்றபோது அறுவரினதும் பிரேதபரிசோதனை நடத்திய டாக்டர் சந்திரசேகரம் வலித்துமார் சாட்சியமளித்தார். நேற்றைய இதழில் கொல்லப்பட்ட மூவரின் பிரேதபரிசோதனைபற்றி டாக்டர் அளித்த சாட்சியம் வெளிவந்திருந்தது. மிகுதி மூவரின் மரண விசாரணை பற்றி டாக்டர் தெரிவித்த தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

டாக்டர் தமது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:

"நாராயணசாமி சஜந்தேஸ்வரனின் [வயது 11] பிரேத பரிசோதனையை மேற்கொண்டேன். முதுகின் இடப்பக்கத்தில் இரண்டு அங்குல விட்டமுள்ள சன்னம் உட்புகுந்த காயம் காணப்பட்டது. வயிற்றுப்புறத்தின் வலது பக்கத்தில் 4 அங்குல விட்டமுள்ள சன்னம் வெளிப்பாய்ந்த காயம் காணப்பட்டது. வலது முழங்கையில் மூன்று அங்குல நீளமுள்ள வெடிப்புக்காயமும் எலும்பு முறிவடைந்தும் காணப்பட்டன. முதல் காயத்தினூடாக உட்புகுந்த சன்னங்கள் இரண்டாம் காயத்தினூடாக வெளிப்பாய்ந்திருந்தன. மூன்றாவது காயம் ஏற்பட்ட காயம் வேறு துவக்குச் சூட்டினால் ஏற்பட்டது.

முதுகின் இடப்பக்கத்தில் இரண்டு அங்குல விட்டமுள்ள சன்னம் உட்புகுந்த காயம் காணப்பட்டது. இடது பக்க 4-ம், 5-ம், 6-ம் விலாஎலும்புகள் முறிவடைந்து காணப்பட்டன. இடது பக்க சுவாசப்பையில் இரண்டு அங்குல நீளமுள்ள வெடிப்புக்காயம் காணப்பட்டது. பின்னர் தலையின் நாலு அங்குல நீளமுள்ள துவாரம் காணப்பட்டது.

ஈரலில் இரண்டு அங்குல நீளமுள்ள வெடிப்புக்காயமும், குடலின் முற்பகுதியில் ஒரு அங்குல விஸ்தீரணமுள்ள இரண்டு துவாரங்களும் காணப்பட்டன. நடுக்குடலில் இரண்டு அங்குல விட்டமுள்ள இரண்டு துவாரங்கள் காணப்பட்டன. பெருங்குடலில் ஒரு அங்குல விட்டமுள்ள இரண்டு துவாரங்கள் காணப்பட்டன.

துவக்குச்சூட்டினால் சுவாசப்பையில் ஏற்பட்ட காயத்தினால் ஏற்பட்ட இரத்தப் பெருக்கினாலும் அதிர்ச்சியினாலும் சுவாசத் தடையேற்பட்டு இறந்தவருக்கு மரணம் சம்பவித்துள்ளது. இவருக்கு இரண்டு துவக்குச் சூட்டுக் காயங்கள் பட்டிருந்தன. 2 தொடக்கம் 4 அடி தூரத்தில் நின்று சுடப்பட்டிருக்கின்றது. இவருடைய இரைப்பையில் முழுமையாகச் சீரணிக்காத சோறு, கறி காணப்பட்டது. இறப்பதற்கு மூன்று நாலு மணித்தியாலங்களுக்கு முன்னர் இறந்தவர் உணவை உட்கொண்டிருக்கலாம்.

"அடுத்து லோகானந்தன் ஜெகநாயகனதியின் [வயது 35] பிரேதபரிசோதனையை மேற்கொண்டேன். வலது கையில் 4 அங்குல நீளமுள்ள வெடிப்புக்காயத்துடன் கைஎலும்பு முறிந்தும் காணப்பட்டது. சுவாசப்பையிலும் மூன்று சன்னமும் ஒரு அடைப்பும் காணப்பட்டன. சன்னம் இருக்கவில்லை. தலை உச்சியின் இடதுபக்க மண்டை ஓட்டில் ஆறு அங்குல விட்டமுள்ள ஒரு துவாரமும் மூளையும் எலும்பும் சிதறப்பட்டுக் காணப்பட்டது. அந்தக்காயத்திலிருந்து ஆறு சன்னங்களும் இரண்டு அடைப்புக்களும் எடுக்கப்பட்டன. துவக்குச் சூட்டால் மூளை சிதறுப்பட்டு அதன் காரணமாக ஏற்பட்ட அதிர்ச்சியினால் ஏற்பட்ட சுவாசத்தடையினால் இவருக்கு மரணம் சம்பவித்தது.

"இறுதியாக வி. லோகானந்தனின் [வயது 37] பிரேத பரிசோதனையை மேற்கொண்டேன்.

துவக்குச்சூட்டினால் இதயத்தில் ஏற்பட்ட காயத்தினால் அதனுடனேற்பட்ட இரத்தப் பெருக்கினாலும் சுவாசம் தடைப்பட்டு இவருக்கு மரணம் சம்பவித்தது.

சுவாசப்பை, இருதயம், ஈரல், வயிறு குடல் ஆகியவற்றில் துவக்குச்சூட்டினால் சன்னங்கள் பாய்ந்த காயங்கள் காணப்பட்டன. இவருக்கு ஒரு துவக்குச்சூடு மாத்திரம் விழுந்துள்ளது. சூடு விழுந்தவுடனேயே இவர் இறந்துவிட்டார்.

மேல்விசாரணையை 4-1-82க்கு ஒத்திவைத்த நீதவான் எதிரிகளை தொடர்ந்தும் மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ)

## நயினாதீவில் வெள்ளத்தால் விவசாயம் பாதிப்பு

(நயினாதீவு)

கடந்த சுமார் இருவார காலமாக நின்றும் பெய்து வரும் கடும் மழை காரணமாக நயினாதீவு முழுவதிலும் தோட்டக் காணிகளும் வெள்ளம் தேங்கி நிற்பது காரணமாக, இப்பகுதி மக்களின் பயிர்ச்செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. தீவுப்பகுதியில் வெங்காயம், மிளகாய் உற்பத்தியில் நயினாதீவு கடந்த பல ஆண்டுகளாக முன்னணி வகித்து வந்துள்ளது. இவ்வாண்டு முன்னெப்போதுமில்லாதளவில் இங்கு கடும் மழை தொடர்ச்சியாகப் பெய்துவருகின்றது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் வீடுகளிலிருந்து குடிபெயர்ந்துள்ள குடும்பங்களுக்கும் தேவையான நிவாரண உதவிகளை வழங்கும்படி இப்பகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களும், கிராம முன்னேற்றச் சங்கங்களும், மாவட்ட செயலாளரையும் வேண்டி உதவி அரசாங்க அதிபரையும் வேண்டியுள்ளனர். வெள்ளத்தால் சேதமுற்ற தோட்டங்கள், குடியிருப்புகள் முதலியன சம்பந்தமாக நயினாதீவு வடக்குக் கிராம முன்னேற்றச் சங்கம் விபரமான பட்டியல் ஒன்றைத் தயாரித்து வருகின்றது. (அ)

## இந்திய கிரிக்கட் நடுவர் விலக்கப்பட்டார்

புதுடில்லி டிச. 24

இந்தியாவில் டெஸ்ட் பந்தயங்களை ஆடிவரும் இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்திய நடுவர்கள் மீது எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து மொஹமட்கோஷ் என்ற நடுவரை இந்திய கிரிக்கட் சபை விலக்கியுள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் குழுவின் நிர்வாக சபையினர் இந்திய நடுவர்கள் சரியாகப் பணியாற்றவில்லை என்று தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர். இவ் எதிர்ப்பு பற்றி அவர்கள் எழுதியுள்ள கடிதமொன்றில் மும்முறை விளையாட்டுக்களில் நடுவர்களால் தாம் அதிருப்தி அடைந்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

## இடமாற்றம்

[சாவகச்சேரி]

கடந்த மூன்றாண்டுகளாகச் சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிய திரு. சி. வி. விக்கினேஸ்வரன் 82 ஜனவரி 1ம் திகதி தொடக்கம் மன்னார் நீதிமன்றத்திற்கு இடமாற்றஞ்செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்திற்குப் புதிய நீதிபதியாக கல்முனையைச் சேர்ந்த எம். எம். காரியப்பர் நியமிக்கப்பட்டுள்ளார். (க

